## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.

## அசல் வழக்கு எண். 168/2019.

பெயர் : செல்வி P.W.1.

க/பெ. : கண்ணன்

தேதி : 05.02.2024

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

குறுக்கு விசாரணை:–

எனது தந்தை பெயர் கோவிந்தசாமி. கோவிந்தசாமியின் சகோதரர் கணேசன் என்றால் சரிதான். கணேசன் என்பவரின் இரண்டாவது மனைவிதான் 3ம் பிரதிவாதியான ஜானகி என்றால் சரிதான். கணேசனின் முதல் மனைவியின் பெயர் கோவிந்தம்மாள் என்றால் சரிதான். கோவிந்தம்மாள் இறந்த பிறகுதான் கணேசன் ஜானகியை இரண்டாவதாக திருமணம் செய்துகொண்டார் என்றால் சரிதான். கணேசனுக்கு இரண்டாவது திருமணம் நடைபெறும்போது அவருக்கு 52 வயது என்றால் இருக்கலாம். ஜானகிக்கு திருமணத்தின்போது 27 வயது என்றால் இருக்கலாம். இருவருக்கும் இடையே வயது வித்தியாசம் 25 இருக்கும் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் வேலி சம்பந்தமான பிரச்சனைக்காக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். நான் இரண்டு சர்வே எண்களுக்க வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1வது சர்வே எண் 432/11, 2 வது சர்வே எண் 432/4G ஆகும்.

நான் குடியிருப்பது தாவா முதல் அயிட்டச்சொத்து என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வாசாஆ 2 ஆவணம் தவிர மற்ற எல்லா ஆவணங்களும் தாவா முதல் அயிட்டத்திற்குரியது என்றால் சரிதான். வாசாஆ 2 ஆவணம் எனது தாயார் எனக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட்ஆவணம் என்றால் சரிதான். செட்டில்மெண்ட் ஆவணம் பதிவு செய்யப்படவேண்டும் என்றால் அந்த இடம் கோவில் இடம் என்பதால் அதை பதிவுசெய்ய முடியாது. தாவா முதல் அயிட்ட சொத்தை பொறுத்து 08.08.2012ல் ஏற்பட்ட வாசாஆ 1 ஆன செட்டில்மெண்ட் பத்திரம் பதிவுசெய்யப்பட்ட பத்திரம் என்றால் சரிதான். அது பட்டா இடம் என்பதல் பதிவு செய்யப்பட்டுள்ளது. வாசாஆ 2 ஆன ஆவணம் பதிவு

செய்யப்படாததால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றால் சரியல்ல. வாசாஆ 2 ல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தை பொறுத்து பார்வதி பெயரில் மூலப்பத்திரம் உள்ளதா என்றால் இல்லை. தாவா 2 அயிட்ட சொத்தை பொறுத்து எனது தாயார் பெயரில் குத்தகை பதிவேடு உள்ளது என்ற விபரத்தை எனது வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால் இல்லை.

இந்த வழக்கு சீர்காழி உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு பின்னர் இந்த நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் I.A. 23/2016 ல் இடைக்கால உறுத்துக்கட்டளை பிறப்பிக்கப்பட்டதா என்றால் இல்லை. மேற்படி I.A.23/2016 ல் தாவா 2 அயிட்ட சொத்தை பொறுத்து உரிமைமூலமும். அனுபவமும் இல்லை என்றும் 1 வது அயிட்ட சொத்தை பொறுத்து மட்டும் எனக்கு இடைக்கால உறுத்துக்கட்டளையானது கடந்த 17.11.2017 ல் அன்று வழங்கப்பட்டது என்ற விபரம் தெரிந்துகொண்டே வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. இரண்டு அயிட்ட சொத்துக்களுக்கும் ஒரே நான்கொல்லை குறிப்பிட்டுள்ளேனா அல்லது தனித்தனி நான்கொல்லைகள் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இரண்டு சொத்துக்களுக்கும் ஒரே நான்கெல்லைதான் உள்ளது. முதல் அயிட்டத்திற்கு தெற்கு பக்கத்தில் இரண்டாவது அயிட்ட சொத்து உள்ளது. முதல் அயிட்டத்திற்கு வடபுறம் ரோடு உள்ளது. முதல் அயிட்ட சொத்தின் வழியாகத்தான் 2 வது அயிட்ட சொத்திற்கு செல்ல முடியும் என்றால் சரிதான். தாவா 2 வது அயிட்ட சொத்தை எனது தந்தை கோவிந்தசாமி 23.11.1996 ல் 3 ம் பிரதிவாதிக்கு அனுபவ பாத்திய உரிமையாக எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 2 வது அயிட்ட சொத்தில் தான் கணேசனும், ஜானகியும் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

கணேசன் 2010 ஆம் ஆண்டில் இறந்துவிட்டார் என்றால் சரிதான். தாவா 2 வது அயிட்ட சொத்தை பொறுத்து நான் எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா 2 வது அயிட்ட சொத்தானது ஜானகியின் அனுபவத்திலும் வசத்திலும் இருப்பதால் தான் I.A. 23/2016 ல் நான் இன்று வரை எந்த மேல்முறையீடும் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி 2 ம் அயிட்ட சொத்திற்கு 3 ம் பிரதிவாதியின் கணவர் பெயரில் வீட்டுவரி விதிக்கப்பட்டுள்ளது என்ற விபரம்

தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. நான் முதல் அயிட்ட சொத்தில் இருந்துகொண்டே 3ம் பிரதிவாதிக்கு உரிமையான 2ம் அயிட்ட சொத்தை அபகரிப்பதற்காக பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் தான் I.A. 23/2016 ல் எனக்கு பகுதியாக அனுமதிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

எனக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையே வேலிப்பிரச்சனையானது 2012 ஆண்டிலிருந்து ஏற்பட்டது. இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் நான் புகார் கொடுப்பதற்காக காவல் நிலையம் சென்றேன் அவர்கள் உரிமையியல் சம்பந்தப்பட்ட வழக்கு என்பதால் நீதிமன்றத்தை அனுகும்படி கூறினார்கள். நான் வேலி சம்பந்தமாக புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் அவ்வாறே நான் புகார் கொடுத்திருந்தால் அந்த புகாரின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கலாம் என்றாலும் சரியல்ல. வாசாஆ 3 மற்றும் வாசாஆ 4 ல் புல எண் 432/10 என குறிப்பிடப்பட்டுள்ளதால் அது தாவா சொத்திற்கு உரியது அல்ல என்றால் சரியல்ல. வாசாஆ 8 மற்றும் வாசாஆ 9 ல் சுப்பூசி மகன் கிருஷ்ணபூசி என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் எனது தாயார் பெயர் அதில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். தாவா 2வது அயிட்ட சொத்தை பொறுத்து உரிமை மூலம் எனது தாயாருக்கு இல்லாததால் அவர் வாசாஆ 2 ஆவணத்தை எழுதிவைக்க உரிமை இல்லை என்றால் சரியல்ல. தாவா 2 அயிட்ட சொத்து எனது தாயார் பெயரில் உள்ளதற்கான எந்த ரசீதுகளும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாசாஆ 8 மற்றும் வாசாஆ 9 ரசீதுகள் தாவா சொத்திற்கு உள்ள ஆவணங்கள் இல்லை என்றாலும் அதனால் அதன் மூலம் எந்த பயனையும் நான் அடைய முடியாது என்றாலும் சரியல்ல. வாசாஆ 10 மற்றும் வாசாஆ 11 ஆகியவை முதல் அயிட்ட சொத்திற்கு உரியது என்பதால் அந்த ஆவணங்கள் 2வது அயிட்ட சொத்திற்கு பொருந்தாது என்றால் சரியல்ல. வாசாஆ 2 ஆன ஆவணம் பதிவுசெய்யப்படாததாலும்,உரிமை மூலம் இல்லாததாலும் அதன் அடிப்படையில் எந்த பரிகாரமும் நான் பெறமுடியாது என்றால் சரியல்ல. வாசாஆ 2 ஆன ஆவணமானது தாவா 2 அயிட்ட சொத்தை 3ஆம் பிரதிவாதியிடமிருந்து அபகரிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட போலியான ஆவணம் என்றால் சரியல்ல. நான் தூய கரத்துடன் நீதிமன்றத்தை அனுதாகதால் நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் 2 வது அயிட்ட சொத்தின் அனுபவத்தையும், உரிமை மூலத்தையும் காட்டக்கூடிய ஆவணம் இல்லை என்பதால் தாவா 2 அயிட்ட சொத்தை பொருத்து இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல. எனது சாட்சியம் எனது வழக்கிற்கு விரோதமாக இருப்பதால் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியது இல்லை என்றால் சரியல்ல.